# மெட்ரோவில் இலவச மருத்துவ முகாம்: 5 நாளில் 5,200 பேருக்கு பரிசோதனை

**சென்னை, மார்ச் 1:** மெட்ரோ ரயில் நிலையங்களில் 5 நாள்கள் நடைபெற்ற மருத்துவமுகாமில் 5,200 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், அப்போலோ மருத்துவமனை ஆகியன சார்பில், 12 மெட்ரோ ரயில் நிலையங்களில் இலவச மருத்துவ முகாம் பிப்ரவரி 24-ஆம் தேதி முதல் பிப்ரவரி 28-ஆம் தேதி காலை மற்றும் மாலையில் நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமில் பி.எம்.ஐ(உயரம், எடை), ரத்த அழுத்தம், சீரற்ற ரத்த சர்க்கரை ஆகிய பரிசோதனைகள் மற்றும் ஆலோசனை வழங்கப்பட்டது. சென்ட்ரல் மெட்ரோ, ஏஜி டி.எம்.எஸ், சைதாப்பேட்டை, ஆலந்தூர், எல்.ஐ.சி., திருமங்கலம், வடபழனி, வண்ணாரப்பேட்டை, ஈக்காட்டுதாங்கல், ஆயிரம் விளக்கு, அண்ணா நகர் கோபுரம், ஷெனாய் நகர் ஆகிய 12 மெட்ரோ ரயில் நிலையங்களில்

நடைபெற்ற முகாம்களில் முதல்நாளில் 595 பேரும், 2-ஆவது நாளில் 1,272 பேரும், மூன்றாவது நாளில் 1,086 பேரும், 4-ஆவது நாளில் 1,098 பேரும், 5-ஆவது நாளில் 1,149 பேரும் கலந்து கொண்டு பயனடைந்தனர். இந்தத் தகவல் சென்னை மெட்ரோ ரயில் நிறுவன செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.